RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22228

OPEN ACCESS

# தமிழ் நாடக ஆசிரியனும் சமுதாயப் பின்னணியும்

**அரங்க. சீனிவாசன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம்-636007, தமிழ்நாடு, இந்தியா

# Tamil Dramatist and Social Background

**R. Srinivasan [a, *]**

[a] Department Tamil, Government Arts College (Autonomous), Salem-636007, Tamil Nadu, India

* Corresponding Author: srinivasansangee.vi@gmail.com

Received: 08-02-2022
Revised: 02-04-2022
Accepted: 15-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

A drama with lofty lessons that can uplift a society penetrates the present. At the festivals, people watched plays to pass the time. Nowadays, the time when stories were being enacted in the context of the social situation in the country has come to an end, and today there is a situation where the lives of the people in the society are being played as drama. Drama is a good tool for today's social transformation and renaissance. The political systems and the daily lifestyles of the struggling people can be introduced even in the old art of koothu. In today's time, a lot of social problems are facing the youth. Today's poets, artists, and youth are giving us so many new creations. The common people may not understand or know these new ideas. In order to make them known, new messages can be explained through the art they know.

**Keywords:** Drama, Poet, Koothu, Social Background

## முன்னுரை

பொதுமக்களோடு நெருங்கிப் பழகும் ஒரு கலையாக இன்று நாடகம் இருப்பதற்குக் காரணம், நாடக ஆசிரியர்கள் தங்கள் நாடகத்துக்குக் கருத்தையும் கதையையும் பொதுமக்களின் அன்றாட வாழக்கைச் சிக்கலிலிருந்து தேர்ந்தெடுப்பதே ஆகும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதில் கூட சமுதாய அறத்தை அடிநாதமாகக் கொண்டதே நல்ல நாடகமாக முடியும்.

'அது அன்றாட வாழ்க்கையைச் சித்தரிக்கும் யதார்த்தப் படைப்பாக(சுநயடளைஅ) இருக்கலாம் அல்லது வாழ்வுக்கு அடித்தளமாகும் நிலையான உண்மைகளை ஆதாரமாகக் கொண்ட கற்பனைச் சித்திரங்களாக இருக்கலாம். மனித தர்மத்தை அடிநாதமாகக் கொண்ட அந்த கற்பனையாகவும் இருக்கலாம்' (Suthakar, 1981). அனைத்தும் மனித வாழ்வுடன் நெருங்கிய சம்பந்தமுடையவையே. சுருங்கக் கூறின் மெருகேறிய வாழ்க்கைச் சித்திரங்கள் எனலாம். எனவே, நாடகம், வாழ்வோடு கலந்துதான் அமைய வேண்டும். வாழ்க்கையில் ஆழமான வேர்களைப் பற்றிக் கொண்டு நிற்க வேண்டும்.

## நடிகன், சமுதாயத் தொடர்பு

'நடிகன் என்றால் வாசித்து முடிந்ததும் குப்பையில் எறியும் செய்தித்தாள் அல்ல, வாழ்விற்கு முரண்பாடான விஷயங்களைக் கூறும் ஏட்டுச் சுரைக்காயும் அல்ல, நடிகன் என்றால் 'சமுதாயப் புரட்சியாளன்'. தன்னுடைய உணர்ச்சி நிறைந்த நடிப்பினாலும், வாழ்க்கை மிகுந்த வாக்கு வன்மையினாலும் மனித சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சித்தரித்துக் காட்டிச் செவ்விய வழியில்

திருந்தச் செய்யும் கர்மவீரன். கலை, கற்பனை ஆகிய இரு மூச்சுகளைக் கொண்டு பிரணாயாமம் செய்து, சமுதாயம் என்னும் உடலின் மூலாதாரத்தில் ஒடுங்கிக் கிடக்கும் அறிவாகிய குண்டலினிச் சக்தியைப் படம் பிடித்து ஆடச்செய்யும் ஆத்மயோகி' என்று பழம்பெரும் நடிகர் கே.டி. சந்தானம் குறிப்பிடுவதால் நடிகனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு இனிதே விளங்கும்' என்று குறிப்பிடுகிறார் பேராசிரியர் முனைவர் இரா.குமரவேலன் (Navaneethakirutnan & Gunasekaran, 1982).

இவ்வாறு சமுதாயத்துடன் தொடர்புள்ள நாடகம், கண்ணின் வழியாகவும் செவியின் வழியாகவும் பேருற்றுகளாகப் பாய்ந்து சென்று, மனம் என்கின்ற கடலில் கலந்து, சிந்தனைத் தெளிவு என்கின்ற எழுச்சிமிகு அலைகளை எழுப்புகிறது. அச்சிந்தனை அலைகள் மனிதத் தன்மைக்கு அலைகளை எழுப்புகிறது. அச்சிந்தனை அலைகள் மனிதத் தன்மைக்கு மாறுபட்ட மாசுகளையும் தூசுகளையும் கொண்டு வந்து கரையிலே ஒதுக்கித் தள்ளி, மனக்கடலை மாசற்றதாகச் செய்கிறது. அதனால் மனம் தூய்மை அடைகிறது. இவ்வரிய பணியினை நாடகம் தவிர வேறெந்தக் கலையாலும் செய்ய இயலாது. எனவே, கலைகளில் நாடகக்கலையே மேம்பட்டதாகப் போற்றப்படுகிறது. சமுதாயத்தின் தனிக்கூறான மனிதவாழ்வையும் செம்மைப்டுத்தி அவனை உயர்த்தவும் செய்கிறது.

## சமுதாயத் தொடர்பற்ற நாடகம்

வானமே கூரையாய் நடுச்சந்தியில் ஆடுந் தெருக்கூத்து ஒருபுறமிருக்க, மேடையில் நடிக்கும் வழக்கமும் எழுந்தது. கூத்தாடுதல் ஊர் மக்களின் திருவிழாவும் பொழுதுபோக்கும் ஆகும். இவ்வாறு கலையாக இருந்தது பின்னர் வணிகத்துறையில் ஒன்றாயிற்று. இக்கருத்திற்கு அணிசெய்யும் விதத்தில் ராக்பெல்லர் முதலாளித்துவக் கலாச்சாரம் கலைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகையில். 'வியாபாரப் பிரதிநிதிகளும் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது, புதிய கருத்துக்களை ஒவ்வொருவரிடமிருந்து பெறவும், தவறான அபிப்ராயங்களைத் திருத்திக் கொண்டு புதிய வழிகளில் செல்லவும் உதவியாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். இது சில வேளைகளில் திடமனதுடைய வியாபாரிகளின் புதியன படைக்கும் உணர்வுடைய கலைஞர்களின் இடைவெளியை இணைக்க உதவும்' என்பது நினைவில் கொள்ளத்தக்கது (Subramanian, 2010). பணமே உயிர்நாடியாகிய சமூக அமைப்பில் கலைஞனை வணிகருடன் இணைக்க முயல்கின்றனர் என்று தெரிகிறது. ஆகவே கலையும் வணிகமாகியுள்ளது.

## தெருக்கூத்தும் சமயத் தொடர்பும்

'விழாக் காலத்தில் வந்து ஆடிச் செல்லும் கூத்தர்களைப் போல இவ்வுலகத்து மக்களும் வாழ்க்கை எனும் நாடகத்தில் ஆடிச் செல்கிறார்கள்' என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் கூறும் கருத்திலிருந்து கூத்திற்கும் சமய விழாவிற்கும் இடையே இருந்த தொடர்பு ஓரளவு புரிகிறது. 'நாட்டுப்புறத்தாரின் சமய நம்பிக்கைக்கும் நாட்டுப்புறக் கலைகளுக்கும் மிகுந்தத் தொடர்பு உண்டு. அந்தத் தொடர்பைத் தெளிவாக உணர்ந்து கொண்டால், நாட்டுப்புறச் சமயம், நாட்டுப்புறக் கலைகள் இவ்விரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக'6 அமைவதை உணர முடியும் (Balathandayutham, 1975).

மகாபாரதக் கூத்துக் கதையின்போது, முதல்நாள் திரௌபதையின் சுயம்வரம் நடைபெறும். இதனைக் கூத்தாக நடிப்பதற்கு முன் நடத்தப்படுவது பகாசூரன் கதை. பகாசூரன் கதை, கூத்து அரங்கில் நடைபெறுவதில்லை. பீமனாக வேடமிட்டவர் ஒரு மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றி வருவார். அவ்வாறு வரும்பொழுது, ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டாரும், தாங்கள் செய்த பலகாரங்களைக் கொண்டு வந்து பீமனிடம் கொடுப்பார்கள். இவ்விதம் கொடுத்த பலகாரங்களை எல்லாம் வாங்கி வண்டியில் நிரப்பிக் கொண்டு கூத்துக்களத்தை அடைவது வழக்கம். கூத்துக்களத்தை அடைந்தவுடன். அனைவருக்கம் வண்டியிலுள்ள பலகாரங்களைப் பிரசாதமாகக்கொடுப்பது வழக்கம். இதன்பின் பகாசூரன் வதம் நடைபெறும். இது பெரும்பாலும் ஆறு மணிக்கு முடிந்து விடும். ஆதன் பிறகு இரவு பத்து மணிக்குத் திரௌபதி சுயம்வரம் நடைபெறும். ஊரிலுள்ள அனைவரும் திரண்டு,

பலகாரங்களைச் செய்து, படையலிட்டுப் பகிர்ந்து கொடுத்து, உண்டு மகிழ்ந்து கூத்தில் கலந்து கொள்ள வருவார்கள்.

தெருக்கூத்து, தங்கள் கிராமத்தில் நடைபெறும்பொழுது இன்றும் அக்கிராமத்தில் உள்ளவர்கள் அதனை ஒரு சமூக விழாவாக, சமய விழாவாக ஏற்றுக்கொண்டு அதில் பங்கு பெறுகிறார்கள் என்பது இதனால் விளங்கமுடியும். இவ்வாறு மக்கள் சமயங்களோடு இணைந்து வளர்ந்த நாடகத்தை வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியதொரு கலையாகச் சமண சமயம் கூறுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஏலாதி, 'நாடகத்தை ஒருவன் சார்ந்தால் அவனுக்குப் பழி, பாவம், பகை, சாக்காடு என்ற தீமைகள் அனைத்தும் வந்து சேர்ந்துதவிடும்' என்று குறிப்பிடுகிறது. ஆயின் சமண சமயக் கொள்கையை ஏற்காத நிலையில் தமிழ் மக்கள், தங்கள் சமயத் தொடர்புடைய ஒரு கலையாக நாடகத்தை இன்றளவும் போற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தெருக்கூத்தும் நாட்டு விசாரணையும்

அனைத்துத் தெருக்கூத்திலும் நாட்டுவிசாரணை என்ற ஒரு பகுதி உண்டு. 'தேன் பொழியும் மதுரை வளநாட்டில் தேவாலயம் திருவிழா நடந்து வருகுதா? அந்தணர்கள் செய்யும் அனுஷ்டான பூசையும் அறமும் நடந்து வருகுதா? ஆகாச கங்கையும் மாதம் மும்மாரி பெய்து அன்பாய்ச் செழித்து வருகுதா?' என்பது போன்ற மன்னர் தேச விசாரணைகள் செய்வர். மந்திரிகள் மறுமொழி கூறுவர். ஒரே நாடகத்தில் இரண்டு மூன்று முறைகள் கூட இவ்விசாரணைகள் அமைவது உண்டு. மக்கள் நலனில் மன்னன் கொண்ட அக்கறையை எடுத்தக்காட்டுவதே இதன் நோக்கம், தெருக்கூத்தில் அமையும் ஒருவகைப்பட்ட சமுதாயப் பின்னணியின் தாக்கம் இதுவாகும்.

## நாடகமும் சமுதாயமும்

ஒரு சமுதாயம் என்பது பலகோடி தனிப்பட்ட மனிதர்களின் சங்கமம். தனிமனிதனுக்குப் பொருந்தக்கூடிய வாதம், ஒரு சமுதாயத்திற்கும் பொருந்தும். எனவே, ஒரு சமுதாயம் நான்கு விதமான நினைவோட்டங்களை (உழளெஉழைரளநெளள)உடையதாக இருக்க வேண்டும். 1. பொருளாதார உணர்வு, 2. சமூக உணர்வு, 3. அரசியல் உணர்வு, 4. பண்பாட்டு உணர்வு இந்த நான்கையும் சமுதாயம் என்னும் சதுரங்கத்தை உருவாக்கும் கோடுகள் எனலாம். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால் கூட அச்சதுரங்கம் முழுமை அடைய முடியாது. அதுபோல நாடகம் இந்நான்கின் உணர்வுகளைக் கொண்டு பிரதிபலிக்கப்பட வேண்டும்.

நாட்டுச் சிக்கலை நயம்படக் கூறுவது சமூக நாடகங்களெனில், வீட்டுச் சிக்கலை விளக்கிக் காட்டுவன குடும்ப நாடகங்கள். வீடின்றி நாடில்லை. 'வீட்டுப் போராட்டங்கள்தாம் நாட்டுப் போராட்டங்களாக உருவெடுக்கின்றன. குடும்பத்தார் உருவாக்கும் தனிமனிதச்சிக்கல்தான் சமுதாயச் சிக்கல்களாகவும் நாட்டுச் சிக்கல்களாகவும் உருமாற்றம் பெறுகின்றன'. தனிமனிதன் திருந்தினால் நாடே திருந்தும் என்று கூறுவதன் உட்பொருளே 'வீடு நலம் பெற்றால் நடே நலம் பெறும்' என்பதுதான். தனிமனிதச் சிக்கலை அடிப்படையாகக் கொண்டமை குடும்ப நாடகங்கள் ஆகும். சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்கள், கொள்கைகள், வாழ்வியல் நடைமுறைகள் அனைத்தும் நல்லன என்றும், முறையானவை என்றும் அப்படியே ஏற்கும் ஒருசாரார் பழைய - மூத்த - தலைமுறையினர். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று புதிய நாகரிகத்தில் மூழ்கிப் பழமை அனைத்தையுமே மூடநம்பிக்கைகள் என்றும் அறியாமைகள் என்றும் ஒதுக்கித் தள்ளும் ஒருசாரார், இன்றைய இளைய தலைமுறையினர், பழைய தலைமுறையினருக்கும் புதிய தலைமுறையினருக்கும் இடையே போராட்டம் உருவாகும். இத்தகைய மரபு இடைவெளி என்று கூறப்படும் தலைமுறை இடைவெளியால் உருவாகும் இயல்பான குடும்பப் போராட்டாங்களைக் கொண்டிருப்பனவாகவும், இன்று பல்வேறு தொலைக்காட்சி நாடகங்கள் தோன்றியுள்ளன.

## நாடகத்தின் பயன்

ஆயிரம் பொதுக்கூட்டங்களின் மூலம் தூண்டி விடுகின்ற அறிவுப்புரட்சியினை ஒரு நல்ல நாடகத்தின் மூலம் தூண்டிவிட முடியும்' என்று கருதப்பெறும். நாடகம் நல்லதோர் கலை மாத்திரமல்ல. நாட்டுக்குப் பயனும் பலனும் தரத்தக்க சிறந்த ஊடகமும்(ஆநனயை) ஆகும். எனவேதான், சேக்ஸ்பியர் நாடக வழக்கிற்கோ விதிகளுக்கோ கட்டுப்படாத நாடகங்களை எழுதினார். அவரது கவலைகள் அனைத்தும் மக்களைப் பற்றியே இருந்தன. அவர் பாத்திரங்களைப் படைத்துத் தம் விருப்பப்படியே இயங்கவிட்டார். தமிழ் நாடகத்தை நோக்கின் சிலவற்றில் பழமையும், பலவற்றில் பழமையும் புதுமையும், இன்னும் சிலவற்றில் புதுமையும் பொலிவுற்றிருப்பதைக் காண முடியும்.

'முற்காலத்தில் புராண இதிகாச வரலாற்று நாடகங்கள் பழமைக் கருத்துக்களின் கருவூலங்களாக இருந்தன. இடைக்காலத்தில் புராண வரலாற்றுப் பின்னணியில் இழைக்கப்பட்டுப் புதுமைக் கருத்துக்களால் பின்னப் பட்டிருக்கும் நாடகங்கள், பழமைப் புதுமைக் கலவையாக இருந்தன. தற்காலத்தில் நடப்புச் சமூக வாழ்வின் போக்கைப் பலவாகக் கொண்டு, இன்றைய கருத்துக்களை ஊடையாக்கி, நெய்யப்பட்ட நாடகங்கள் புதுமையுடன் அமைந்துள்ளன.

## முடிவுரை

நாடக ஆசிரியனும் சமுதாயமும் பிரிக்கமுடியாத பிணைப்புடன் இருக்க வெண்டும். நாடக ஆசிரியன் சமூக பார்வையில் இருந்து விலகிச் சென்றாலும் சமூகம் நாடக ஆசிரியன் பார்வையிலிருந்து விலகிசென்றாலும் சமூகத்திற்கு பயனுள்ள நாடகம் அமையாது. தற்போதைய சூழ்நிலையில் குறிப்பிட்ட ஒரு கருத்து அது எவ்வளவு பழமையானாலும் அல்லது அது மிகச்சிறந்த புதுமையே ஆனாலும் நாடக ஆசிரியன் இது சமூகத்திற்கு மிக்கப் பயன்தரக் கூடியது என கருதினால் அதனை எவ்வகையிலும் சொல்லியே தீரவேண்டும். நேரிடையாக சொல்ல இயலவில்லை என்றாலும் குறிப்பாகவோ அல்லது சிலேடையாகவோ சொல்லியே ஆகவேண்டும் அப்போதுதான் சமுதாய நலன் காத்திட இயலும் நாடக ஆசிரியனின் கூரிய பார்வை எப்போதும் சமுதாயத்தின் வளர்ச்சி மீதே இருக்கவேண்டும். தாய் தன் சேய் வேண்டியதை வேண்டிய நேரமறிந்து கொடுப்பது போல நாடக ஆசிரியர்கள் சமூகத்திற்கு வேண்டியதை பயன்படும் அரிய கொள்கைகளையும், நெறிமுறைகளையும் ஆராய்ந்து அறிந்து சமூகத்திற்கு வழங்குதல் இன்றைய தேவையாகும்.

## References

Balathandayutham, K. (1975) Ilakiyathil Manitha Neyam, New Century Book House, Chennai, India

Navaneethakirutnan, M., Gunasekaran, K.A. (1982) Karakattam, Akaram, Sivaganga, India

Subramanian S.V. (2010) Pathinenkilkanakku Noolkal, Manivaasagar Pathippagam, Chennai, India

Suthakar, M.V. (1981) Merinavin Nadakangal, Pooram Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License